**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 215/2018 P.W. 5/L.W.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. ஜெனிஷா ராணி | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 22.04.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லதரசியாக இருந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். 11.11.2016 அன்று மாலை 05.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ரோட்டில் நின்று சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். எங்க அப்பாவை திட்டிக்கொண்டிருந்தார். எங்கள் அப்பா வீட்டில் ரூமில் இருந்தார். நான் என் அப்பாவிடம் சொல்லி என் அப்பா வெளியில் வந்தார்.

2. அப்போது அப்பா கழுத்தில் இருந்த டவ்வலை பிடித்து இழுத்து டார்வின் டேனியல் தள்ளிவிட்டார். அதில் காலில் உரசல் காயம் ஏற்பட்டது. அப்பா கீழே விழுந்து கிடந்தபோது அவரது வயிற்றில் சவுட்டினார். டார்வின் டேனியல் கையால் மூக்கில் குத்த வரும்போது அப்பா தலையை சாய்த்தால் அது அவருடைய கண்ணில் பட்டுவிட்டது. பின்னர்அவர் அடிக்கவரும் போது அந்தஅடி என்அப்பாவின் தோள்பட்டையில் பட்டுவிட்டது. நாங்கள் அனைவரும் சத்தம் போட்டவுடன் அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் வந்து டார்வின் டேனியலை பிடித்து வைத்திருந்தார்கள். பின்னர் மருத்துவமனைக்கு அப்பாவை அழைத்துச்சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

**1.** எங்கள் வீட்டைச் சுற்றி மதில்சுவர் இல்லை. நான் சொன்ன சம்பவங்கள் அனைத்தும் எங்கள் வீட்டு படிக்கட்டில் வைத்து நடந்தது என்றால் சரிதான். மேற்படி படிக்கட்டு எங்கள் முற்றத்தில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடக்கும்போது என் அப்பா படிக்கட்டின் மேல் நின்றுக்கொண்டிருந்தார் என்றால் சரிதான்.

2. டார்வின் டேனியல் முற்றத்தில் நின்றுக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். என்அப்பா படிக்கட்டிலிருந்து இருந்து டார்வின் டேனியலை நெஞ்சில் எட்டி மிதித்தார் என்றால் இல்லை. மீண்டும் என்அப்பா உதைக்க முற்படுகையில் அவர் முற்றத்தில் கீழே அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் என் அப்பாவின் இரண்டு பெருவிரலிலும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னை போலீசார் விசாரிக்கும்போது டவ்வலை இழுத்த விஷயத்தை சொன்னேனா என்றால் சொல்லியிருப்பேன்.

3. போலீசாரிடம் கொடுத்த புகாரை எனது சகோதரி தான் எழுதிக்கொடுத்தார். அதை நான் படித்துப்பார்த்தேன் என்றால் சரிதான். சம்பவ காலகட்டத்தில் நான் படித்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி நாகர்கோவிலில் படித்துக்கொண்டிருந்தேன். சம்பவத்தன்று நானும் என் சகோதரியும் கல்லூரிக்கு சென்றிருந்தோம் என்றால் செல்லவில்லை. என் சகோதரி கல்லூரிக்கு போய்விட்டு மதியம் வந்தாள்.

4. டார்வின் டேனியல் வந்த இருசக்கர வாகனத்தை எடுத்துச்செல்லவிடாமல் நானும் என் அம்மாவும் பிடித்து வைத்திருந்தோம் என்றால் சரியல்ல. பக்கத்தில் இருந்தவர்கள் பிடித்து வைத்திருந்தார்கள், நாங்களும் சேர்ந்து தான் பிடித்து வைத்திருந்தோம் என்றால் சரிதான். எதற்காக ஜே.சி.பி கொண்டு போனேன் என்று குற்றம் சுமத்தப்பட்ட நபர் கேட்டார் என்றால் இல்லை, அவர் அசிங்கமாக திட்டினார்.

5. என்னுடைய தோட்டம் வழியாக என்னிடம் கேட்காமல் ஜே.சி.பி யை ஏன் கொண்டு சென்றீர்கள் என்று டார்வின் டேனியல் என் அப்பாவிடம் கேட்டாரா என்றால் கேட்டார். தன்னுடைய தோட்டத்தில் சேதம் ஏற்பட்டதை கேட்பதற்காக தான் டார்வின் டேனியல் வந்தார் என்றால் சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் என் அப்பாதாக்கவில்லை என்றும், நான் என் அப்பாவிற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.